**நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை - ஆசிய அபிவிருத்தி வங்கி - உடன்படிக்கை இல. 9186-எஸ்ஆர்ஜ) - 2024**

---

நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 9186-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சுசு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வட மாகாணத்தில் 3 தீவுகளில் (நயினா தீவு, அனலைதீவு மற்றும் எழுவைதீவு) சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவு மற்றும் கிராமிய சமூகங்களிற்கான மின்வலு உற்பத்திக்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 288 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிர்வகிக்கப்பட்ட வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தல் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 மார்ச் 19 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னாலஇனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கின்ற ரூபா 11.5 மில்லியன் தொகையான பிடிகாசு சிவில் வேலைகள் கணக்கிற்கு தவறாக செலவு வைககப்பட்டிருந்தது. இதன் விளைவால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட சிவில் வேலைகளிள் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவிலை. | தவறுகள் திருத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை மின்சார சபை என்பன ஈடுபடுகின்ற ஐ.அ.டொலர் 115 மில்லியன் இணயானது, ஐ.அ.டொலர் 1.25 மில்லியன் பெறுமதியில் செயற்திட்டமொன்றை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தொடங்கியிருந்தது. ஆரம்பத்தில் செயற்திட்டமானது நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய மூன்று தீவுகளில் அமுலாக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டது. எவ்வாறாயினும் எழுவைதீவு தீவு நயினாதீவின் இடத்தில் தெரிவு செய்யப்பட்டதுடன் இதன்படி செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. 2024 திசெம்பரில் உள்ளவாறு செயற்திட்டமானது இறுதிக் கட்டத்தில் உள்ளது எவ்வாறாயினும் ஆரம்பத்தில் நான்கு செயற்திட்ட நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்தும் கடல்நீர் சுத்திகரிப்பு பொறி நிர்மாணித்தல் மற்றும் நீர் உற்பத்தியை தொடங்குதல் மாத்திரம் அடையப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

| செயற்திட்டக் கூறு | 2024 திசெம்பரி 31 இல் உள்ளவாறு எதிர்பார்க் கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | 2024 திசெம்பரி 31 இல் உள்ளவாறு அடைய ப்பட்ட செயலா ற்றல் சதவீதம் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| சிவில் வேலைகள் தொடர்பான 150 $m^3$/dநாள் கடல் நீர் சுத்திகரிப்பு பொறி வழங்கி பொருத்துதல் | 100 | 100 | நாள் ஒன்றிற்கு 150m³ நீர் உற்பத்தி செய்வதற்கு கடல் நீர் சுத்திகரிப்பு பொறி (SWRO) பூர்த்தியாக்கப்பட்டு யாழ்ப்பாண குடா நாட்டில் தீவு சமூகங்களிற்கு 2021 ஒக்தோபரில் கையளிக்கப்பட்ட | CEB இடமிருந்தான மின் வழங்கல் நலிவாக இருந்தமையால் இந்த பிரச்சனை எழுந்தது. அந்த பிரச்சனைகள் நாள் ஒனறிற்கு 90m³/day அண்ணளவாக | இலக்கினை அடைவதற்கும் நலன்புரி நோக்கங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | போதிலும் உள்ளபடியான உற்பத்தி நாள் ஒன்றிற்கு 100m³ இற்கு கீழே இருந்தது. பூத்தியாக்கி கணிசமாக காலம் கடந்த பின்னரும் பொறியின் குறித்த இயலளவு அடையப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | குறைந்த எலலையில் நாளாந்தம் 11 மணித்தியங்களிற்கு மெல் மேவப் பட்டிருந்தது. |

## 3.2 செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு தொடர்பான பிரச்சனை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்தவத்தின் பதில் | கணக்காய்வளருடைய பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 185 மில்லியன் கிரயத்தில் 2021 ஒக்தோபர் மாதத்தில் கையளித்த கடல்நீர் சுத்திகரிப்பு பொறி இரண்டு றிசேவ் ஒஸ்மொஸ் (RO) பிரிவுகளுடன் பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியில் குறைந்தது மூன்று ஆண்டுகளிற்கு குறையாமல் RO1 உறுப்பினர்கள் செயற்பாடதிருந்ததுடன் 2025 இல் ரூபா 5.23 மில்லியன் கிரயத்தில் திருத்தப்பட்டிருந்த போதிலும் RO2 பிரிவு எந்நேரமும் ஒரு பிரிவு விலகுகின்ற அதே மாதத்தில் வேலை செய்யாதிருந்தது. கடல் நீர் சுத்திகரிப்பு பொறி தீவு சமூகங்களிற்கு பாதுகாப்பான நீர் வழங்கல் தொடர்ச்சியான வழங்குவதற்கு குறைவான மேற்பார்வை, தரமான சேவை வழங்குநருடனான உடன்படிக்கை இன்மை மற்றும் முறையான பராமரிப்பின்மையால் அடிக்கடி பழுதடைதல், தவிர்க்க முடியாத உயர்ந்த கிரயம் மற்றும் வரையறுத்த இயலளவு பொறியினுடைய இயலுமையை குறித்து மதிப்பிடுதல் என்பன கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டது. | தற்பொது திருத்த வேலைகள் செயற்பாட்டில் உள்ளன. | செயற்திட்டம் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு பொறியை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |